பதிவு எண் : M. 6311 ★ தொலைபேசி : 51331 ★ நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D M K

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர் : 15] சென்னை : ஆனி 19உ (3—7—67) திங்கள் ★ வெளியூர் : ஆனி 20உ (4—7—67) செவ்வாய் [இதழ் : 16

சுகர்ணோ படமும் மறைகிறது!

★

சுகர்ணோவின் உருவப்படங்களுக்கும் ஆபத்து ஏற்பட்டுவிட்டது! அவரது படங்கள்— இதுவரை எங்கெங்கு இருந்ததோ அங்கிருந்தெல்லாம் அகற்றிவிடுமாறு அரசு அதிகாரிகளுக்கு கிழக்கு ஜாவா இராணுவ அதிகாரி குறிப்பு அனுப்பியுள்ளார்.

திட்டமிட்டோரைச் சாடுகிறார் தேபர்

முன்னாள் காங்கிரசுத் தலைவரின் காலங்கடந்த சிந்தனை

பதினைந்தாண்டுச் 'சாதனை' — வறுமையும் வேலையில்லாத் திண்டாட்டமும்தானா?

மதுரை, சூலை 2—

"ஏழ்மையையும், வேலையில்லாத் திண்டாட்டத்தையும் போக்கும் பிரச்சினையை அணுகுவதில் திட்டமிட்டவர்கள், மக்கள் நம்பிக்கையை இழந்துவிட்டனர்"

என்று, முன்னாள் அனைத்திந்தியக் காங்கிரசுத் தலைவரும் தற்போதைய கதர்—கிராமக் கைத்தொழில் கமிஷன் தலைவருமான திரு. யு. என். தேபர் குற்றஞ்சாட்டினார்.

"நீர்ப்பாசனத்துறை, கல்வித்துறை, பெருந் தொழில் துறை ஆகியவற்றில் மிகப்பெரிய திட்டங்களை நிறைவேற்றியும் கடந்த 15 ஆண்டுக் காலத்தில் பொருளாதார வளர்ச்சி தலைகீழாகவே போய்க்கொண்டிருக்கிறது. வேலையில்லாத் திண்டாட்டம் உச்சநிலையடைந்திருக்கிறது; மக்களின் பொருளாதார நிலை வருந்தத்தக்க நிலையிலேயே நீடித்திருக்கிறது" என்று மேலும் அவர் கூறினார்.

திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சி காணீர்!

வரிச் சுமையும் வாங்கிய கடனும் பெருகியதே மிச்சம்!

இந்தியாவின் பொருளாதாரத்தில் என்ன நேர்ந்திருக்கிறது என்பதை அறிந்துகொள்ள 1967—68-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தின் சில புள்ளிவிவரங்களை, 1950—51-ம் ஆண்டைய வரவு-செலவுத் திட்டப் புள்ளிவிவரங்களுடன் ஒப்பிட்டுத் திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சியைக் காணவேண்டும்.

சாதாரண மக்கள் மீதான மறைமுக வரிச் சுமை மலைக்கத்தக்க அளவுக்கு அதிகரிக்கப்பட்டிருக்கிறது. பெரும்பாலும் அன்றாடப் பயன்பாட்டுப் பொருள்களின் மீதான மத்திய கலால் வரி ரூ. 68 கோடியிலிருந்து ரூ. 1116 கோடியாக உயர்ந்துள்ளது; சர்க்கரை மீதான கலால் வரி ரூ. 6 கோடியிலிருந்து ரூ. 86 கோடியாகவும், தேயிலை மீதான வரி ரூ. 3 கோடியிலிருந்து ரூ. 18 கோடியாகவும், மண்ணெண்ணெய் வரி ரூ. 28 இலட்சத்திலிருந்து ரூ. 66 கோடியாகவும் உயர்ந்துள்ளன!

நாட்டின் பொதுக்கடன் ரூ. 2,054 கோடியிலிருந்து ரூ, 11,726 கோடியாகப் பெருகியுள்ளது. இதில் வெளிநாட்டுக் கடன் மட்டும் ரூ. 32 கோடியிலிருந்து ரூ. 5,413 கோடியாக உயர்ந்திருக்கிறது!

ஆண்டுதோறும் பொதுக் கடனிலிருந்து செலவிடப்படும் தொகை ரூ. 37 கோடியிலிருந்து ரூ. 510 கோடியாகியிருக்கிறது!

நிர்வாகச் செலவுகள் மட்டும் ரூ. 21 கோடியிலிருந்து ரூ. 124 கோடியாகியிருக்கிறது!

ஏறிய விலை இறங்கியது

கோழிக்கோடு, சூலை 2—

மொரார்ஜி தேசாய் அளித்த வரவு-செலவுத் திட்டத்தின் விளைவாகக் காபி, தேநீர் போன்ற ஏழை மக்களின் அன்றாடப் பயன்பாட்டுப் பொருள்களின் விலையைத் தங்கள் விருப்பம்போல் ஏற்றி விற்கும் சிற்றுண்டி விடுதியினர், கோழிக்கோட்டில் 25 சதவிகிதம் விலையை உயர்த்தியுள்ளனர்.

இதன் விளைவாகப் பொதுமக்களின் எதிர்ப்பு அதிகமாகி, காவல் துறையினரின் துணை தேவைப்பட்டது.

கோழிக்கோடு மாவட்ட உணவு—சிற்றுண்டி விடுதிகளின் உரிமையாளர்கள் பிரதிநிதிகள் மாவட்ட கூடுதல் மாஜிஸ்திரேட்டைச் சந்தித்து, தங்களின் நிலையை விளக்கினர்.

மாஜிஸ்திரேட்டுடன் கலந்து ஆலோசித்து, உணவுப் பொருள்களின் விலையைப் பழைய நிலைக்கே குறைத்துக் கொள்வதெனச் சிற்றுண்டி விடுதிகளின் உரிமையாளர்கள் முடிவு செய்தனர்.

மாநிலத் தொழில்களுக்கு ஊக்கமளிப்பு

ஆந்திர அரசு நடவடிக்கை

ஐதராபாத், சூலை 2—

மாநிலத்திற்குள் இயங்கும் தொழில்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் ஆந்திர மாநிலத்திற்குள் தயாராகும் பொருள்களையே அரசுத் துறைகளுக்கு பயன்படுத்திக் கொள்வது பற்றி ஆந்திர அரசு ஆய்வு செய்துகொண்டிருப்பதாக, ஆந்திரத் தொழில் அமைச்சர் திரு. பி. வி. குருமூர்த்தி கூறினார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது :—

"அரசுத் துறைத் தொழிற்சாலைகளிலிருந்து அவைகளின் உற்பத்திப் பொருள்களை அரசின் பல துறைகளிலும் வாங்குவதற்கென அரசாங்கம் அண்மையில் ஓர் ஆணை பிறப்பித்திருக்கிறது."

"தனியார் துறையில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களை வாங்குவதில் சில இடர்ப்பாடுகள் உள்ளன" என்றும் அவர் கூறினார்.

கல்லூரி இடநெருக்கடி இவ்வாண்டு சமாளிக்கப்படும்

இடம் காலியாக உள்ள விவரம் வானொலி மூலம் அறிவிக்க ஏற்பாடு

சட்டமன்றத்தில் கல்வியமைச்சர் நெடுஞ்செழியன் அறிவிப்பு

சென்னை, சூலை 3—

"மாலை நேரக் கல்லூரிகளை அதிகரிக்கும் உத்தேசம் எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை"

என்று, கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன், இன்று சட்டமன்றத்தில், திரு. வி. சுவாமிநாதன் கேள்விக்குப் பதிலளித்தார்.

பல்வேறு துணைக் கேள்விகட்கு பதிலளிக்கையில் தெரிவித்ததாவது :—

"அரசாங்கப் பணிகளிலும், வேறு அலுவலகங்களிலும் வேலையில் உள்ளவர்கள்—கல்லூரிப் பட்டப் படிப்பை அரைகுறையாக நிறுத்தியவர்கள் ஆகியோர் தொடர்ந்து படித்துப் பட்டம் பெறுவதற்குத்தான் மாலை நேரக் கல்லூரி துவங்கப்படுகிறது.

மாணவர்கள் இடமில்லாமல் தவிப்பதைத் தவிர்ப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருவதாகப் பல்கலைக்கழகத் துணைவேந்தரும் கூறியிருக்கிறார்.

'ஷிப்டு' முறையை ஏற்படுத்தப் பல்கலைக்கழகம்தான் ஆவன செய்யவேண்டும்.

அடுத்த ஆண்டு பல கல்லூரிகளில் 'ஷிப்டு' முறை ஏற்படுத்த ஆவன செய்வதாகத் துணைவேந்தரும் கூறியிருக்கிறார்.

இவ்வாண்டு இட நெருக்கடியைச் சமாளிக்க சென்னை அரசினர் கலைக் கல்லூரியிலும், மேரி அரசி கல்லூரியிலும் அதிக இடம் ஒதுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், ஷிப்டு முறை ஏற்படுத்தப் போதிய இட வசதியும், பேராசிரியர்களும் தேவை. அதற்குத் தனியார் கல்லூரிகள் ஏற்பாடு செய்யுமானால், அரசும், பல்கலைக் கழகத்துக்குப் பரிந்துரை செய்யும்.

சென்னை அரசினர் கலைக் கல்லூரி—மேரி அரசி கல்லூரி—சேலம் அரசினர் கலைக் கல்லூரி—கோவை அரசினர் கலைக் கல்லூரி—தஞ்சை சரபோஜி கல்லூரி—மதுரை மீனாட்சி கல்லூரி ஆகியவற்றில், 'ஷிப்டு' முறை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

'ஷிப்டு' முறையை ஏற்படுத்த பேராசிரியர்கள் தனியாகவே நியமிக்கப்படவேண்டும்; அதற்குப் பல்கலைக் கழக அனுமதியும் தேவை. எனவே, இந்த ஆண்டில் இட நெருக்கடியை எப்படியும் சமாளித்துவிடலாம் என்ற நம்பிக்கை இருக்கிறது. அடுத்த ஆண்டு தேவையான ஏற்பாடுகளைச் செய்துகொள்ளலாம்.

தற்போதே சில கல்லூரிகளில் நிறைய இடம் இருப்பதாகத் தகவல் கிடைத்துள்ளது. மேலும் பல கல்லூரிகளில் இடம் இருக்கக்கூடும். இது பற்றிய தகவல்கள் திரட்டப்பட்டுவருகின்றன.

மருத்துவக் கல்லூரியில் சேருவதற்கான மாணவர்கள் தேர்வு முடிவு அறிவிக்கப்பட்ட பின்னர்தான், எங்கெந்தக் கல்லூரியில் எத்தனை இடங்கள் காலியாக உள்ளன என்பது இறுதியாகத் தெரியவரும். அதன் பிறகு, இந்த விவரத்தைப் பத்திரிகை வாயிலாகவும் வானொலி மூலமும் அறிவிக்க ஏற்பாடு செய்யப்படும்.

திருச்சி பெரியார் ஈ. வெ. ரா. கல்லூரியினரும், பிஷப் ஹீபர் கல்லூரியினரும் அதிக இடம் ஏற்படுத்துவதற்கு அனுமதி கோரியுள்ளனர். இந்தக் கோரிக்கை குறித்தும் பல்கலைக் கழகத்திற்குப் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது.

தொழிற் கல்லூரிகளில் மாலை நேர வகுப்புத் துவக்கும் யோசனை எதுவும் இல்லை."

சுமையைக் குறைப்பதில் ஒத்துழைப்பு தாருங்கள்!

"சாதாரண மனிதர்களும் அசாதாரண காரியங்களை நிறைவேற்ற வேண்டுமென்று எதிர்பார்க்கும் காலம் இது!

"பெரும் கடமையை நிறைவேற்றுகிற பொறுப்பு என்னிடம் விடப்பட்டுள்ளது; அந்தச் சுமையை நான் தாங்குவதற்கு உங்களையொத்த நண்பர்களது ஒத்துழைப்பு மிகவும்தேவை. என் முன் உள்ள பணிகளுக்குத் தீர்வுகள் எளிதில் ஏற்படுவதாக இல்லை! தீர்வுகளைத் தேடும்போது அவை நழுவி ஓடுகின்றன!

"நாட்டின் வரலாற்றில் பொருளாதார மந்தமும் சமூகக் கொந்தளிப்பும் மிகுந்த நாட்கள் இவை! தமிழகம் போன்ற ஒரு மாநிலத்தில் எனது பணி மிக்க கடினம்! மக்கள் சிந்திக்க மறுப்பவர்களாயிருந்தால் எனக்குக் காரியம் எளிதாக இருக்கக் கூடும்; ஆனால் நமது மாநில மக்கள், சிந்திக்கத் தெரிந்தவர்கள்! எதையும் ஆய்ந்தறிந்து நோக்கும் ஆற்றல் உள்ளவர்கள்! மேலும் இங்கு பல அரசியல் கட்சிகள் பரப்பிடும் செய்திகளும், மக்களின் சிந்தனைப் போக்கைப் பாதிக்கின்றன!

"சனநாயகம் வளர்ந்து முழுமை அடையும்போது கட்சிகளுக்கிடையே காணும் கொள்கை வேறுபாடுகள் சிறுத்துவிடும். அமெரிக்காவின் சனநாயகக் கட்சிக்கும்—குடியரசுக் கட்சிக்கும் இங்கிருப்பவர்களால் வேறுபாடு காணுவது கடினமாக இருக்கும்.

"வியட்நாம் போரை விரைவில் முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்று ஒரு சாராரும், வியட்நாம் பிரச்சினைக்கு முடிவு காண வேண்டுமென்று மற்றொரு சாராரும் கூறுவார்கள். 'போர்' என்பதற்கும்—'பிரச்சினை' என்பதற்குமிடையே வேறுபாடு காணுவார்கள் அங்கே!

"சனநாயகத்தின் வளர்ச்சியில் உள்ள ஒரு கடினமான தன்மை இதுதான்! எழுகின்ற பிரச்சினைகளை நுணுகி ஆராய்ந்து தீர்வு கண்டாக வேண்டும்—எளிதில் ஒதுக்கித் தள்ள இயலாது!"

—அறிஞர் அண்ணா

(பச்சையப்பன் கல்லூரி பழைய மாணவர் மன்ற ஆண்டு விழாவில்)

நெருக்கடி நாட்டுக்கு அல்ல— ஆளும் கட்சிக்குத்தான்!

மக்களின் அடிப்படை உரிமைமீதுள்ள ஆக்கிரமிப்பு தொடருகிறது!

இனியும் நெருக்கடி நிலை நீடிப்பது நாட்டுக்கும் ஆட்சிக்கும் நல்லதல்ல!

மக்களவையில் இரா. செழியன் கண்டன முழக்கம்

“நெருக்கடி நிலைமை, தேவை நீங்கிய பின்னும் நீடிக்கப்படுகிறது. ‘நெருக்கடி’ என்பது—வெளிநாட்டு ஆக்கிரமிப்பால் உண்டாகும் நெருக்கடி அடங்கிவிட்டது; உண்மையில் இப்பொழுது உண்டாகியுள்ள நெருக்கடி உங்கள் ஆட்சிக்கு - எதேச்சாதிகாரப் போக்குக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியாகும்!

“வெளிநாட்டு ஆக்கிரமிப்பு என்றால், அதை எதிர்த்துப் போராட கடைசி மனிதர் வரையில் எல்லோரும் தயாராக இருக்கிறார்கள்!

“இப்பொழுது உண்டாகியுள்ள ஆக்கிரமிப்பு, நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகள் மீது, கட்டுப்பாடற்ற ஆட்சி நடத்தும் ஆக்கிரமிப்பேயாகும்!

“இது, நாட்டுக்கு ஏற்பட்ட நெருக்கடி அல்ல—ஆளுங் கட்சிக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி!

“அரசியல் சட்டத்தின் பேராலேயே உண்டாகியுள்ள சர்வாதிகார ஆட்சிக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி;

“உங்களுடைய போலீசு ஆட்சிக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி!

“உங்கள் ஆட்சிக்கு—இருண்ட இறந்த காலத்தையும் நம்பிக்கையற்ற எதிர்காலத்தையும் உடைய உங்கள் ஆட்சிக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி!

“இத்தகைய நெருக்கடியைச் சமாளிக்கத்தான், நெருக்கடி நிலைமை என்பதை நீங்கள் தொடர்ந்து நடைமுறையில் வைத்துக்கொண்டிருக்கிறீர்கள்!

“ஜூலை 1-ந் தேதியிலிருந்து நெருக்கடி நிலைமை நீக்கப்பட வேண்டுமென்றுள்ள தீர்மானத்தை நான் ஆதரிக்கிறேன்; அது நாட்டுக்கு நல்லது—உங்களுக்குக் கூட நல்லது!”

என்று, மக்களவையில் தி.மு. கழக உறுப்பினர் இரா. செழியன் குறிப்பிட்டார்.

‘ஜூலை முதல் நாளுக்கு மேலும் நெருக்கடி நிலை நீடிக்கக் கூடாது’ என்று கோரும் தீர்மானத்தின் மீது நடந்த விவாதத்தில் கலந்துகொண்டு அவர் பேசியதாவது:—

நெருக்கடிக்கால நிலைமையை ஜூலை முதல் தேதியிலிருந்து திரும்பப் பெறவேண்டுமென்று உறுப்பினர்கள் கொண்டுவந்துள்ள தீர்மானத்தை நான் ஆதரிக்கிறேன்.

‘ஜூலை முதல் தேதியிலிருந்து நெருக்கடிக்கால நிலைமை நீக்கப்படும்’ என்ற நம்பிக்கை தரும் அறிக்கையை உள்துறை அமைச்சர் சவான், மார்ச் 18-ந்தேதி வெளியிட்டார். அந்த அறிக்கையில், மூன்று வாக்கியங்கள்தான் இருந்தன; இப்பொழுது, மூன்று பக்கங்கள்கொண்ட நீண்ட அறிக்கையை அவர் தந்துள்ளார்—நெருக்கடிக்கால நிலைமையை நீக்க முடியாததற்கு!

அதற்கு அவர் தந்துள்ள காரணங்களில் ஒன்று குறிப்பிடத்தக்கது. நெருக்கடி நிலைமையை நீக்குவதற்குமுன் செய்யவேண்டிய அரசியல் சட்டத் திருத்தத்துக்கு எதிர்க் கட்சிகள் ஒத்துக்கொள்ளவில்லையென்றும், எதிர்க் கட்சிகள் ஒத்துக்கொள்ளாததால் எல்லாவற்றையும் ஒத்திப்போட வேண்டி வந்ததென்றும் அவர் குறிப்பிட்டார்.

எதிர்க் கட்சிகளின் கருத்துக்கு மதிப்பளிக்கும் சனநாயகப் பண்பாடு மாண்புமிகு அமைச்சரிடம் இருப்பதை நான் வரவேற்கிறேன்.

ஆனால், இதேபோன்ற சனநாயகப் பண்பாடு ‘பாஸ்போர்ட்’ மசோதாவில் அரசாங்கத்திடமிருந்து வராதது வருந்துவதற்குரியதாகும்.

எல்லா எதிர்க் கட்சிகளும் பாஸ்போர்ட் மசோதாவை ஒருமுகமாக எதிர்த்தன; ஆனால் மாண்புமிகு அமைச்சர், அப்பொழுது அதைப் பொருட்படுத்தவில்லை.

இப்பொழுது மட்டும், ‘எதிர்க் கட்சிகளின் ஆதரவு கிடைக்கவில்லை; எனவே, மசோதா கைவிடப்பட்டது’ என்று கூறுவதற்குக் காரணம், எதிர்க் கட்சிகளின் கருத்தை மதிக்கும் சனநாயகப் பண்பாடு அல்ல—‘எதிர்க் கட்சிகளின் ஆதரவு இல்லாமல் அரசியல் சட்டத் திருத்தத்தை இப்பொழுது இவர்களால் கொண்டு வரமுடியாது’ என்பதுதான்!

சனநாயக உணர்வு அல்ல—எண்ணிக்கை உணர்வு அவர்களை ஆட்டிவைக்கிறது!

சாதாரண பெரும்பான்மை மட்டும் போதும் என்றால், ஆளுங் கட்சியினர் மற்றவர்களை இலட்சியம் செய்வதில்லை!

அரசியல் சட்டத் திருத்தத்துக்கு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை வேண்டும்; எனவே ஆளுங்கட்சியிடம் பணிவு உண்டாகிறது!

அரசாங்கம் கொண்டுவர விருந்த அரசியல் சட்டத் திருத்தத்தில் இரண்டு முக்கியப் பகுதிகள் இருந்தன; ஒன்று—நெருக்கடி நிலைமையை இந்தியா முழுவதற்கும் செயல்படுத்தாமல், ஒரு சில பகுதிகளுக்கு மட்டும் செயல்படுத்த வகைசெய்வது; இரண்டாவது—நெருக்கடி நிலைமையின்பொழுது நடைபெற்ற நடவடிக்கைகளுக்கு அரசாங்கத்தின் மீது நஷ்டஈடு கேட்டுத் தொல்லை தராமல் பார்த்துக்கொள்வது.

நெருக்கடி நிலையை வைத்து,ப் பலர் கைது செய்யப்பட்டார்கள்—காரணம் காட்டப்படாமல் சிறையில் தள்ளப்பட்டார்கள்!

அவர்களெல்லாரும், நெருக்கடி நிலைமை தீர்ந்ததும், தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியைக் காட்டி நஷ்டஈடு கேட்கப்போகிறார்கள்!

நூற்றுக்கணக்கான—ஆயிரக்கணக்கான வழக்குகள் அரசாங்க அதிகாரிகள்மீது தொடரப்பட இருக்கின்றன; இவற்றைத் தடுக்க அரசாங்கம் சட்டபூர்வமாக முயலுகிறது.

நெருக்கடி நிலைமை தந்த அதிகாரத்தை வைத்து, பல தான்தோன்றித்தனமான காரியங்களை அரசாங்கம் செய்தது; அதன் பலனை ஏற்றுத்தான ஆகவேண்டும்.

நீங்கள் செய்தது தவறில்லை என்றால்—உங்கள் மனச்சாட்சி தெளிவாக இருந்தால்-வழக்குகளைப் பற்றி அஞ்சத் தேவையில்லை! ‘தவறுகள் செய்திருக்கிறோம்’ என்பது உங்களுக்கே நன்கு தெரிகிறது! குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கிறது! அதற்குக் குறுக்கு வழிகள் தேடுகிறீர்கள்!

பாகிஸ்தானத்தின் பகை இருக்கிறது—சீனாவின் சீற்றம் இருக்கிறது இந்தச் சூழ்நிலையில் நெருக்கடி நிலைமை நீக்கமுடியாது” என்று உள்துறையமைச்சர் தமது அறிக்கையில் கூறுகிறார்.

இந்தப் பகை உணர்ச்சிகள் எப்பொழுது தீரப்போகின்றன என்று யாருக்குமே தெரியாது.

“சீனாவின் தொல்லை இன்னும் ஆயிரம் ஆண்டுகளுக்குக்கூட இருக்கும்” என்று பண்டித ஜவகர்லால் நேரு ஒருமுறை கூறினார்.

அப்படியானால், இன்னும் ஆயிரம் ஆண்டுகளுத்கு நெருக்கடி நிலைமை தொடர்ந்து இருக்கவேண்டுமா என்பது தெரியவேண்டும்.....

ஓர் உறுப்பினர்:—“நல்லவேளை; காங்கிரசு ஆட்சி ஆயிரம் ஆண்டுகளுக்கு நீடிக்காது!

இரா. செழியன்:—“நெருக்கடி நிலைமை என்பது போய், அன்றாட வாழ்க்கையில் ஒரு பகுதியாகிவிட்டது”

நெருக்கடி நிலைமை நீடிப்பதால் உண்டாகும் கேடுபாடுகளை விளக்குமுன், நெருக்கடி நிலைமை எத்தகைய சூழ்நிலையை உண்டாக்குகிறது என்பதைக் கூற விரும்புகிறேன்.

அரசியல் சட்டத்தின் 352, 259(1) ஆகிய பிரிவின்கீழ் குடியரசுத் தலைவர் பிறப்பித்த நெருக்கடி நிலைமை உத்தரவால் இரண்டு விளைவுகள் நேர்ந்துள்ளன; ஒன்று—அரசியல் சட்டத்தில் மூன்றாவது பகுதியில் தரப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள், நெருக்கடி நிலைமை செயலில் இருக்கும் காலத்தில் தள்ளிவைக்கப்படுகின்றன.

இரண்டாவதாக — அடிப்படை உரிமைகள் பறிக்கப்பட்டதை எதிர்த்து நீதிமன்றத்துக்கும்போய் நீதி கேட்கும் உரிமையும் தள்ளிவைக்கப்படுகிறது.

அநியாயமாக யாரையாவது சிறையில் அடைத்து வைத்தால்கூட—அவசர ‘ரிட்’ மனு கொடுத்தால்கூட, நீதிமன்றத்துக்கு அந்தவழக்கை ஏற்றுக்கொள்ளும் வாய்ப்பு இல்லை!

உரிமை பறிக்கப்படுவது மட்டுமல்ல—அதைப் பற்றி நீதிமன்றத்தில் கேட்கக்கூட வழி இல்லை! கால் கட்டப்பட்டது மட்டுமல்ல—வாயும் அடைக்கப்பட்டு விடுகிறது!

இவை இரண்டும், சனநாயக முறையில் பெரிய குறைபாடுகளாகும்.

எனக்குமுன் பேசிய காங்கிரசு உறுப்பினர் டி. என். திவாரி, ‘பொதுப்படையாகக் கண்டிக்காமல், ‘நெருக்கடி நிலைமையால் என்ன பாதகம் நேரிட்டது என்று திட்டவட்டமான நிகழ்ச்சிகளைச் சுட்டிக்காட்டிப் பேசவேண்டும்’ என்று கேட்டார்.

நெருக்கடி நிலைமையின் அதிகாரம் தவறாக—வஞ்சக நோக்குடன் பயன்படுத்தப்பட்டதற்கு ஒன்று இரண்டு அல்ல—நூற்றுக்கணக்கான வழக்கு விவரங்களை என்னால் காட்டமுடியும்.

நெருக்கடி நிலைமை தவறாகப் பயன்பட்டதற்கு நடமாடும் எடுத்துக்காட்டுகளாக, இந்த மாமன்றத்தில் பலர் இருக்கிறார்கள்.

வழக்குத் தொடராமல்—காரணங்காட்டாமல்—நீதிமன்றத்தை நாடாமல்-திடீரெனக் கைது செய்யப்பட்டு, சிறையில் தள்ளிவைக்கப்பட்ட அநீதிகள் ஏராளமாக காங்கிரசு ஆட்சியில் நிகழ்ந்திருக்கின்றன!

நெருக்கடி நிலைமை அதிகாரத்தின்கீழ் கைது செய்யப்பட்ட ஒருவரை விடுதலை செய்யுமாறு உத்தரவிட்ட பஞ்சாப் உயர் நீதிமன்றம் தனது தீர்ப்பில் கூறியிருப்பதாவது:—

“ஒருவரைத் தண்டிக்க இப்பொழுதுள்ள சட்ட விதிகளில் எதுவும் இடமில்லையென்றால் உடனே நெருக்கடி நிலைமை அதிகாரத்தைப் பயன்படுத்தி அவரைச் சிறைக்குள் அடைத்துவிடுவது சரியல்ல.”

1965 நவம்பர் 22-ம் நாள் தரப்பட்ட தீர்ப்பின் முடிவைப் படித்துக் காட்டினேன்.

இந்தியாவின் அட்டர்னி-ஜெனரலாக இருந்த எம். சி. செதல்வாட் கூறியதாவது:—

“சீன ஆக்கிரமிப்பைத் தொடர்ந்து கிடைத்த அதிகாரத்தை வைத்துக்கொண்டு அரசாங்கம் ஒரு அரசியல் சட்டபூர்வமான சர்வாதிகாரமாகத் தன்னை ஆக்கிக்கொண்டுவிட்டது.”

இந்திய அரசாங்கத்தின் முதல் வழக்கறிஞராக இருந்த—சிறந்த சட்ட நிபுணரான செதல்வாட், இந்த ஆட்சியை, ‘அரசியல் சட்டபூர்வமான சர்வாதிகாரம்’ என்று கூறுகிறார்!

இதைவிட இன்னும் கடுமையாக, ‘இது ஒரு போலீசு ராஜ்யம்’ என்று பம்பாய் உயர் நீதிமன்ற நீதிபதி தார்குண்டே கூறினார்.

இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்ட சிலரை விடுதலை செய்து, 1966 டிசம்பர் 6-ந்தேதி அவர் அளித்த தீர்ப்பில் கூறியதாவது:—

“இப்பொழுது உள்ள நமது நாட்டு நிலைமையை வைத்துப் பார்த்தால், இதை ஒரு ‘போலீசு ராஜ்யம்’ என்று அழைப்பது மிகையாகாது என்று நினைக்கிறேன்.

“சனநாயகத்தைப் பற்றியே கேள்விப்படாமல்—சட்டமுறைகளைப்பற்றி அறிந்திராமல்—சில வழக்குகளை முடிவுசெய்தால்கூட, இவ்வளவு அடக்குமுறையான—கொடுமையான அநீதியை யாராலும் இழைத்திருக்கமுடியாது.”

சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதி பி. பி. கஜேந்திர கட்கர் தந்த ஒரு தீர்ப்பையும் உங்கள் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறேன்:—

“சீன ஆக்கிரமிப்பையொட்டி, 1962-ல் குடியரசுத் தலைவர் தந்த நெருக்கடி நிலைமைப் பிரகடனம் பல்வேறு வகைகளில் தொடர்ந்துபயன்படுத்தப்படுகிறது; அதன்கீழ் தனிப்பட்டவர்களின் அடிப்படை உரிமைகள் பறிக்கப்படுகின்றன.

“நெருக்கடி நிலைமை என்றாலும் அப்பொழுதுகூட, அடிப்படை உரிமைகளை மறுப்பதற்குச் சட்டபூர்வமானடும். முறைகள் இருக்கவேண்மே லெழுந் தவாரியாகவோ, அலட்சியமாகவோ இவற்றைக் கவனிக்காமல் விடுவது, சனநாயகத்துக்கு பேராபத்தாக முடியும்.

“கட்டுப்பாடற்ற அதிகாரம் தொடர்ந்து இருந்தால், சனநாயகத்தின் அடிப்படை மதிப்புகள் சிதைக்கப்பட்டுவிடும். இந்த அதிகாரம், ஒரு சில சந்தர்ப்பங்களில் மட்டும்தான் பிரயோகிக்கப்படுகிறது என்பது சரியான சமாதானமல்ல. ஒரு சில சந்தர்ப்பங்கள் என்றாலும் களங்கம் களங்கமே என்பதை நாம் உரியவர்களுக்கு எடுத்துக்காட்ட விரும்புகிறோம்.”

சனநாயகத்தின் குரல்வளை எப்படி நெரிக்கப்படுகிறது — சனநாயக முறை எவ்வாறு நசுக்கப்படுகிறது என்பதற்கு இவற்றைவிட மேலான தீர்ப்புகள் வேறு என்ன தேவை?

சட்ட நிபுணர்கள்—உயர் நீதிமன்ற நீதிபதிகள்—சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதி ஆகியவர்கள் நீதிபூர்வமாகத் தந்த தீர்ப்புகளைவிட, இன்னும், ‘இந்த அநீதி அகற்றப்பட வேண்டும்’ என்பதற்கு ஆதாரங்கள் தேவை என்றால், மேலும் தருகிறேன்.

1962-ல் நெருக்கடி நிலைமை வந்தபொழுது, அதை இந்த மன்றத்தின்முன் வைத்து நிறைவேற்றியவர் சட்ட அமைச்சர் ஏ. கே. சென்; அவர் சென்ற ஆண்டு—சட்ட அமைச்சர் என்ற நிலையை விட்டு விலகி நம்மைப் போன்று சாதாரண உறுப்பினராக இருந்தபொழுது கூறியதாவது:—

“நெருக்கடி நிலைமையை உடனடியாக நீக்கவேண்டும்; ஏனென்றால், அதைக் கொண்டுவந்ததற்கு இருந்த அவசியம் இப்பொழுது நீடித்து இருக்கவில்லை.”

நெருக்கடி நிலைமை கொண்டுவர வாதாடியவரே, இப்பொழுது, ‘அது தேவையில்லை’ என்கிறார். இதற்கு என்ன சமாதானம் கூறப் போகிறீர்கள்?

உள்நாட்டில் தருகிற மதிப்பீடு இவை என்றால், வெளிநாட்டில் சனநாயக முறையைத் தெரிந்தவர்கள்—சட்டமுறையை அறிந்தவர்கள் என்ன நினைக்கிறார்கள், இந்தியாவைப் பற்றி?

நெருக்கடிநிலைமை இந்தியாவில் நீடித்துக்கொண்டே போவது பற்றி, உலகச் சட்ட நிபுணர்கள் குழு (International Commission of Jurists) 1967 மார்ச் 1-ந் தேதியிட்ட தமது வெளியீட்டில் கூறியிருப்பதாவது:—

“இந்தியாவைப்பற்றி இதுவரை, ‘சனநாயகத்தின் கோட்டை; சட்ட முறைக்கு மதிப்பளிக்கும் காவல்புரி’ என்று கருதப்பட்டு வந்தது; ஆனால், சீன ஆக்கிரமிப்பால் உருவான நெருக்கடி காரணத்தால் வந்த பாதுகாப்புச் சட்டம் — விசாரணையில்லாமல் சிறைப்படுத்துவது, நீதிமன்றம் செல்லாமல் தடுத்து நிறுத்துவதும் போன்ற முறைகள்—நெருக்கடி காரணம் நீங்கிய பின்புகூட, தொடர்ந்து

(4-ம் பக்கம் பார்க்க)

நேருவின் பெயரால் பலகோடி ரூபாய் பாழ்!

காண்டிராக்டர்கள் கொழுக்க டில்லி அரசு போடும் திட்டம்

"நாற்பத்து நான்கு ஏக்கர் பரப்பில் அமைந்துள்ளதும், ரூ. 3 கோடி விலை மதிப்புள்ளதுமான தலைமையமைச்சரின் மாளிகை (தீன் மூர்த்தி இல்லம்) நேரு நினைவு பொருட்காட்சிக் கூடமாக மாற்றப்பட்டிருக்கிறது. மத்திய கல்வி அமைச்சுத் துறை ஆண்டுக்கு ரூ. 8 இலட்சம் செலவிட்டு இதனைப் பராமரிக்கிறது. பார்வையாளர்கள், இதனை, வீண் டம்பச் செலவுகளில் ஒன்றாகவே கருதுகின்றனர்"

என்று, டில்லியிலிருந்து வெளிவரும் 'ஆர்கனைசர்' என்ற ஏடு சுட்டிக்காட்டியுள்ளது.

"இந்த மாளிகையில் ஒரு பகுதியிலோ அல்லது பிரயாகையில் ஆனந்தபவனில் உள்ள தேசியப் பொருட்காட்சிசாலையிலோ இந்தப் பொருட்காட்சியின் அடிப்படை நோக்கத்தை எளிதில் நிறைவுறச் செய்துவிட இயலும்.

தீன்மூர்த்தி இல்லம், தலைமையமைச்சரின் மற்றொரு அதிகார பூர்வமான குடியிருப்புக்குப் பயன்படக்கூடும்.

ஆனால், இத்தகைய நேரடியான சிந்தனை, இந்தக் குப்பமான அரசுக்கு அப்பாற்பட்டதாகும்.

புதுடில்லியிலேயே நேருவின் பெயரால், மிகவும் பெரிய—பரந்த பெருஞ்செலவிலான காட்சிசாலை ஒன்று ஏற்கனவே இயங்கி வருகிறது; எனினும், கோடிக்கணக்கான ரூபாய்களுக்குக் குறைவாகச் செலவிட்டுச் செய்யப்படும் காரியத்தால், 'நேருவின் பெயர் நிலைத்திருக்க முடியாதோ' என்ற எண்ணத்தை ஏற்படுத்தியிருக்கிறது!

தற்போது, புதிதாக நேரு நினைவு தோட்டத்தை உருவாக்குவதில் முனைந்துள்ளனர்; இந்தத் திட்டத்துக்கு ரூ. 5 கோடி செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

அசோக் ஓட்டலுக்கு மேற்கே, தூதுவரக வட்டாரத்தில் இந்தத் தோட்டம் அமைக்கப்படவிருக்கிறது. ஜப்பானியப் பாணியில் இத்தோட்டம் அமைக்கப்படுமாம். ஏற்கனவே இரு ஜப்பான் நிபுணர்கள் இந்தியாவுக்கு வந்து பார்த்துச் சென்றுள்ளனர். சில இந்தியத் தோட்டக்கலை நிபுணர்களும் ஜப்பானுக்குச் செல்லத் திட்டமிட்டுள்ளனர். இந்த ஏற்பாட்டினால் காண்ட்ராக்டர்களும் வேறு சிலருக்கும்தான் 'யோகம்' அடிக்கப்போகிறது!

இலட்சக்கணக்கான மக்கள் பட்டினியால் வாடிக்கொண்டிருக்கும் இந்த நேரத்தில் ஒரு நினைவுத் தோட்டத்துக்காக ஐந்து கோடி ரூபாயைச் செலவிடுவது பற்றிச் சிந்திப்பதே வெறுக்கத்தக்க செயலாகும்.

"புத்தர் பிறந்தநாள் நினைவுப் பூங்காவை புதுடில்லியில் உருவாக்க ரூ. 60 இலட்சம் செலவிட்டிருக்கும்போது, நேருவின் நினைவுக்கு இந்த நாடு ஏன் ரூ. 5 கோடி செலவிடக்கூடாது?" என்று கேட்கப்படுகிறது.

நேருவின் நினைவுத் தோட்டத்துக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இடம் ஒன்றும் அவ்வளவு பெரியது அல்ல; ஒரு மைல் நீளம்—அரை மைல் அகலம் உள்ளதுதான்; ஆனால் அந்த இடம் முழுதும் கற்பாறையானது; அதிலே தோட்டம் அமைக்க பத்து இலட்சம் டன் வரை மண்ணும் எருவும் தேவைப்படும்.

நினைவுச் சின்னமாகவோ வேறு காரணத்துக்காகவே ஒரு தோட்டம் அமைவதை யாரும் எதிர்க்கவில்லை; ஆனால் எதிற்காக இவ்வளவு பெரிய ஆடம்பரமான தோட்டம்? அதுவும் ஜப்பானிய பாணியில் ஏன்? இந்திய பாணியில் ஏன் இருக்கக்கூடாது? இந்திய தோட்டங்களைக் கண்டுகூட இந்திய அரசு வெட்கப்படுகிறதா?

தோட்டங்கள் மீது இந்திய அரசு அக்கறை செலுத்தவிரும்பினால், இருக்கின்ற தோட்டங்களையே மேம்படுத்திக்கொள்ளலாமே! அதற்கு இத்தகைய திட்டங்கள் தேவையில்லையே!

கற்பாறையாக உள்ள நிலத்தை மென்தரையாக்க விரும்பினால், அந்த வட்டாரம் முழுவதிலும் ஆயிரக்கணக்கான மரங்களை வளர்த்து, அழகான—குளிர்ச்சி தரும் இடமாக்கலாமே!

இதற்கிடையே புதுடில்லியில் நேரு பல்கலைக்கழகம் நிறுவுவதற்காக வேறு கோடிக்கணக்கான ரூபாய் செலவிடபபடுகிறது. ஒரே நகரில் இரு வேறு பல்கலைக்கழகம் ஏற்படுவது புதுடில்லியில்தான்!

கதர்த் திட்டத்தின் எதிர்காலம்

அண்ணாவைச் சந்திப்பார் யூ. என். தேபர்

கோவை, ஜூன் 30—

தமிழகத்தில் கதர் இயக்கத்தின் எதிர்காலத் திட்டம் பற்றி விவாதிக்க, அனைத்திந்தியக் கதர்த் தொழில்—கிராமத் தொழில்களின் குழுத் தலைவர் யூ. என். தேபர் முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களைச் சந்திப்பார் எனத் தெரிகிறது.

இந்தச் சந்திப்பு ஜூலை 3-ல் நடைபெறக்கூடும்.

முதலமைச்சர் அண்ணா அவர்கள், கதர்த் திட்டம் என்பது அரசியல் ஆர்வத்தின்பாற்பட்டதென்றும், பொருளாதாரத்திற்கு ஒத்துவராதது என்றும் கூறியதுபற்றி யூ. என். தேபரிடம் கருத்துக் கேட்கப்பட்டபோது, 'தமிழக முதலமைச்சரைச் சந்தித்து விட்டு அதன் பிறகுதான் கூறுவேன்' என்று கூறியுள்ளார்.

"கதர்த் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு ஆண்டுக்கு இரண்டு கோடி ரூபாய் ஊதியமாகக் கொடுக்கப்படுகிறது"

என்றும் யூ. என். தேபர் கூறியுள்ளார்.

வாரண்டின்றி சோதனை!

சட்ட விரோதமான போதை மருந்துகளை வைத்திருப்பதாகச் சந்தேகிக்கப்படுபவர்களை, வாரண்டில்லாமல் நிறுத்திச் சோதனை போடும் அதிகாரம் பிரிட்டிஷ் போலீசாருக்கு அளிக்கப்பட்டுள்ளது.

மக்களை ஏமாற்றும் கதர்த் திட்டம்

மக்களவையில் கண்டனம்

புதுடில்லி, ஜூன் 80—

"கதர்த் திட்டம், மக்களை ஏமாற்றும் திட்டமாகும்; உற்பத்தி இல்லாத திட்டங்களில் மத்திய அரசு பணத்தைச் செலவழித்து விரயப்படுத்துகிறது"

என்று மக்களவையில் சுயேச்சை உறுப்பினர் தின்கர் தேசாய் மத்திய அரசைக் கடிந்துரைத்துப் பேசினார்.

அவர் மேலும் பேசுகையில் தெரிவித்ததாவது:—

"இந்தியப் பொருளாதாரத்தைச் சீர்குலையச் செய்தது காங்கிரசுக் கட்சி ஆளும் மத்திய அரசே ஆகும்.

மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றியதற்குப் பிறகு—ரூ. 1,500 கோடி மதிப்புள்ள ஸ்டர்லிங்கைச் செலவழித்த பின்பு—இந்தியாவின் பொருள் வளத்தையும், அயல் நாடுகளின் உதவிகளையும் பயன்படுத்தியான பிறகு — இந்தியாவின் பொருளாதாரம் வளர்ச்சியடைவதற்குப் பதிலாகப் பின்னடைந்திருக்கிறது,

ஆந்திரம், ஒரிசா, கேரளம், கருநாடகம் ஆகிய மாநிலங்களில் கடற்கரைப் பகுதிகளில் முந்திரி பயிரிடும் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும்; இறக்குமதியைக் குறைக்க வேண்டும்."

மது லிமாயி

சம்யுக்த சோஷலிஸ்டுக் கட்சித் தலைவர் மது லிமாயி பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"துணி ஏற்றுமதி—இறக்குமதியின்போது, 'கமிஷன்' கொள்ளையடிப்பவர்களைச் சிறையில் அடைக்கவேண்டும்.

முந்திரிப் பருப்பு ஆப்பிரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது; அந்த இறக்குமதியை நிறுத்த வேண்டும்; போதிய அளவுக்கு இந்தியாவிலேயே பயிரிட்டு உற்பத்தியைப் பெருக்கவேண்டும்.

தேயிலைத் தோட்டங்களின் ஆங்கிலேய உரிமையாளர்கள் ஏகபோகமாகக் கொள்ளை இலாபம் பெறுவதைச் சட்டபூர்வமாகத் தடுக்கவேண்டும்."

ஒரிசா அமைச்சர்கள் மீது ஊழல் குற்றச்சாட்டு

புதுடில்லி, ஜூன் 30—

இப்போதைய ஒரிசா அரசாங்கத்தின் மீதும், பழைய அரசாங்கத்தின் மீதும் இலஞ்சக் குற்றம் சுமத்திய சட்டமன்ற—நாடாளுமன்ற உறுப்பினர்கள், இந்தியக் குடியரசுத் தலைவரிடமும் தலைமை அமைச்சரிடமும் புகார் செய்துள்ளனர்.

ஒரிசா மாநில அரசுமீது இலஞ்சக் குற்றம் சுமத்தும் குற்ற அறிக்கையில் ஒரிசா சட்டமன்றக் காங்கிரசு உறுப்பினர்கள் 26 பேரும், நாடாளுமன்றக் காங்கிரசு உறுப்பினர் 8-பேரும் கையெழுத்திட்டுள்ளனர்.

ஒரிசாவின் இப்போதைய முதலமைச்சர் ஆர். என். சிங் தியோ, டாக்டர் மகதாப், முன்னாள் முதலமைச்சர் எஸ். பட்நாய்க் முதலிய அமைச்சர்கள் மீது இலஞ்சக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இலஞ்சக் குற்றம் சுமத்தும் இந்த அறிக்கை, குடியரசுத் தலைவர், தலைமை அமைச்சர், துணைத் தலைமை அமைச்சர், உள்துறை அமைச்சர் ஆகியோரிடம் கொடுக்கப்பட்டுள்ளது.

கோவை லோட்டஸ் மில் துணைக் குழுத் தேர்தல்

கோவை தி. ப. தொ. மு. சங்க லோட்டஸ் மில் துணைக் குழு நிர்வாகிகள் தேர்தலை, கே. வி. பழனிசாமி தேர்தல் ஆணையாளராக இருந்து நடத்திவைத்தார்; தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகள் விவரம்:—

தலைவர்: எஸ். அரங்கசாமி; செயலாளர்: இராமசாமி; துணைச் செயலாளர்: மயில்சாமி; பொருளாளர்: தில்லைராசன்; மாவட்டப் பிரதிநிதி; கருப்புசாமி.

அமைப்புச் செயலாளர்

என்.வி. நடராசன்

முகவரி மாற்றம்

அமைப்புச் செயலாளர் திரு. என்.வி. நடராசன் எம்.எல்.சி. அவர்களுடன் இனி கீழ்க்காணும் முகவரிக்குத் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது:—

என்.வி. நடராசன், எம்.எல்.சி., 18, திருநாவுக்கரசுமுதலிதெரு, பெரம்பூர், சென்னை–11.

அண்ணா தலைமையில் திருமணம்

லோகநாதன் --- காந்திமதி

செங்கற்பட்டு வட்ட தி. மு. க. செயலாளர் தோழர் செ. எ. பலராமன் அவர்களின் மகள் செல்வி: காந்திமதிக்கும்—செல்வி: லோகநாதனுக்கும் 26—6—67 அன்று தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் செங்கற்பட்டில் திருமணம் நடைபெற்றது.

மணமக்களை வாழ்த்தி அமைச்சர் ஏ. கோவிந்தசாமி, நாடாளுமன்ற உறுப்பினர் சிட்டிபாபு, சட்டமன்ற உறுப்பினர்கள் சி. வி. எம். அண்ணாமலை, முனு. ஆதி, கொ. கோதண்டம், செ. கோ. விசுவநாதன், சி. வி. இராசகோபால் எம்.எல்.சி., ஏ. ஆர். தாமோதரன் எம்.எல்.சி., முன்னாள் மத்திய அமைச்சர் ஓ. வி. அழகேசன், பி. என். கிருஷ்ணன் எம்.சி., பசுபதி எம்.சி., மற்றும் பலர் பேசினர்.

ஏராளமான வாழ்த்துச் செய்திகளும் அன்பளிப்புகளும் வந்திருந்தன.

நன்றியறிவிப்பு

இத்திருமண விழாவுக்கு நேரில் வந்திருந்தும், அஞ்சல், தந்திமூலமும் வாழ்த்திச் சிறப்பித்த அனைவருக்கும், உடனிருந்து ஒத்துழைத்தவர்கட்கும் தோழர் செ. ஏ. பலராமன் நன்றி தெரிவித்துகொள்கிறார்.

சேலம் உருக்காலை-மக்களவையில் கேள்விக் கணைகள்

க. அன்பழகன் -- இரா. செழியன் கேள்விகட்கு அமைச்சர் மழுப்பல்!

'ஐந்தாவது உருக்காலை நான்காம் திட்டத்தில் இல்லை'யென அறிவிப்பு

புதுடில்லி, ஜூன் 30—

"இந்தியப் பொதுத்துறையின் ஐந்தாவது உருக்குத் தொழிற்சாலைத் திட்டம் நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தில் இடம் பெறவில்லை; நான்காம் ஐந்தாண்டுத் திட்டம் முடிவு செய்யப்பட்டுவிட்டது"

என்று, எஃகு இரும்புத் தொழில் அமைச்சர் டாக்டர் சென்னா ரெட்டி, மக்களவையில் அறுதியிட்டுக் கூறினார்.

எஃகு இரும்புத் தொழிற்சாலை தொடர்பான வினாக்களுக்கு விடையளிக்கையில் மத்திய அமைச்சர் டாக்டர் சென்னா ரெட்டி மேலும் குறிப்பிட்டதாவது:—

"ஐந்தாவது இரும்புத் தொழிற்சாலை நிறுவும் இடம்—அது தொடர்பாக விவரங்கள், மத்திய அரசு அந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று கருதும்போது ஆய்வு செய்யப்படும்."

சுதந்தராக் கட்சியைச் சேர்ந்த என். ஜி. ரங்காவின் கேள்விக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் தெரிவித்ததாவது:—

"பீகாரில் உள்ள பொகாரோ இரும்பு எஃகுத் தொழிற்சாலையை விரைவில் நிறைவேற்ற மத்திய அரசு அக்கறை செலுத்திவருகிறது"

என்று அமைச்சர் தெரிவித்தார்.

சேலம் எஃகு இரும்புத் தொழிற்சாலை தொடர்பாகத் தமிழக அரசு எதிர்ப்புத் தெரிவித்தது பற்றி மக்களவையில் பல உறுப்பினர்கள் கேள்விக் கணைகளைத் தொடுத்தார்கள்.

அமைச்சர் வாய் திறக்கவே இல்லை.

க. அன்பழகன்

நாடாளுமன்ற தி. மு. க. குழுத் தலைவர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் கேட்டதாவது:—

"சேலம் இரும்புத் தொழிற்சாலைத் திட்டத்தைத் தமிழக அரசே நிறைவேற்ற விரும்பினால், அயல்நாட்டுச் செலாவணி ஒப்பந்தம் செய்துகொள்ள மத்திய அரசு அனுமதிக்குமா?"

இரா. செழியன்

"சேலம் இரும்புத் தொழிற்சாலை நிறுவ ஜப்பான், தமிழக அரசுக்கு ஒத்துழைப்புக் கொடுக்க முன்வந்துள்ளது"

என்று, இரா. செழியன் இதற்கு முன்பே குறிப்பிட்டுக் கூறினார்.

அதற்கு அமைச்சர் பதிலளிக்கையில் குறிப்பிட்டதாவது:—

"சேலம் இரும்புத் தொழிற்சாலையை நிறுவுவதற்குரிய கூறுகளில் அயல்நாட்டுச் செலாவணி என்பது ஒரு கூறேயாகும்; மற்ற கூறுகளையும் சிந்திக்கவேண்டும்."

என். ஜி. ரங்கா

"பொகாரோ திட்டத்தை நிறைவேற்றவில்லையென்றால் சோவியத் தலைமை அமைச்சர் கோசிஜின் சாகும் வரை உண்ணாநோன்பு இருப்பார் என்றோ, விசாகப்பட்டினத்தில் இரும்புத் 'தொழிற்சாலை தொடங்காவிட்டால் ஆந்திர முதலமைச்சர் அறப்போராட்டம் செய்வார் என்றோ மத்திய அரசு அஞ்சுகிறதா?"

என்று என். ஜி. ரங்கா கேட்டார்.

"யார் உண்ணாநோன்பு இருந்தாலும் பரவாயில்லை; திட்டம் பற்றி ஏற்கனவே முடிவு செய்யப்பட்டுவிட்டது" என்று அமைச்சர் பதில் கூறியுள்ளார்.

புதிய உருக்காலை அமைப்பதைவிடப் பொதுத்துறையிலும் தனியார் துறையிலும் ஏற்கனவே ஏற்படுத்தியுள்ள தொழிற்சாலைகளை விரிவுபடுத்தவும் பொகாரோ தொழிற்சாலைத் திட்டத்தை விரைவுபடுத்தவும்தான் மத்திய அரசு அக்கறை செலுத்துகிறது என்று டில்லி வட்டாரம் கருதுகிறது.

கோயில் தேரினுல் சமுதாயத்திற்கு நன்மையுண்டா?

சட்டமன்றக் கேள்விக்கு அமைச்சர் அளித்த பதில்

சென்னை, ஜூலை 3—

கோயில் தேர் செய்வதற்கான பயிற்சிப் பள்ளி 6—5—1965-ல் நாகர்கோயிலில் துவக்கப்பட்டு நடைபெற்று வருவதாகவும், அங்கு 3 ஆண்டுக் காலம் தேர் செய்வதற்கும், பழுது பார்ப்பதற்கும் பயிற்சியளிக்கப்படுவதாகவும், இதுவரை 10 பேர் பயிற்சி பெற்றுள்ளனர் என்றும், அந்த பயிற்சிப் பள்ளியில் செய்யப்பட்ட தேர் ஒன்று நாசிப் பொருட்காட்சிக்கு அனுப்பப்பட்டது என்றும், பெரும்பாலும் ஆங்காங்கு பழுதடைந்துள்ள தேர்களைச் செப்பனிடவே இப்பயிற்சி பெற்றோர் தேவைப்படுகின்றனர் என்றும், அந்தத் தேவையைச் சமாளிக்க இப்பயிற்சி நிலையம் உதவும் என்றும், மேற்கொண்டு புதிதாக இத்தகைய பயிற்சிப் பள்ளி துவக்கும் உத்தேசம் எதுவும் இல்லை என்றும் கல்வி—தொழில் அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் இன்று சட்டமன்ற கேள்வி நேரத்தில் தெரிவித்தார்.

கேள்வி:—"சமூகத்துக்கு எந்த விதத்திலும் பயன்படாத இப்படிப்பட்ட (தேர் செய்தல்) காரியம் கைவிடப்படுமா?"

பதில்:—"சமூகம் இன்னும் அந்த முடிவுக்கு வந்துவிடவில்லை. அந்த முடிவுக்கு வந்துவிட்டால் நாமும் இந்தக் காரியத்தைக் கைவிட்டுவிடலாம். சமூகத்தின் பெரும்பாலோரின் ஆதரவு இன்னும் அதற்கு இருந்துவருவதால் தான் தொடர்ந்து இதனைச் செய்யவேண்டியுள்ளது."

'புத்தூர்' நிகழ்ச்சி—அண்ணு விளக்கம்

சென்னை, ஜூலை 1—

அரசாங்கக் கொள்முதல் தொடர்பாக புத்தூரில் நடந்ததாகக் கூறப்படும் நிகழ்ச்சி குறித்து சட்டமன்றத்தில் எழுந்த கேள்விகட்கு உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன் பதிலளித்துக் கொண்டிருந்தபோது, முதலமைச்சர் அறிஞர் அண்ணு அவர்கள் குறுக்கிட்டுப் பின்வருமாறு கூறினுர்:—

"புத்தூர் நிகழ்ச்சி குறித்துப் பலர் கேள்விகளை எழுப்பினர். இது சம்பந்தமாக அங்குள்ள சிலர் என்னை நேரடியாகச் சந்தித்தனர். சில அதிகாரிகள் தவருக நடந்து கொண்டதாகக் கூறப்பட்டது சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து திருப்தி தெரிவித்தனர். இனி கொள்முதலில் அரசாங்கத்துடன் பரிபூரண ஒத்துழைப்பு அளிப்பதாக அவர்கள் உறுதி கூறியிருக்கிருர்கள்."

அரிசி-நெல் போக்குவரத்துக் கட்டுப்பாடு

செங்கற்பட்டு மாவட்டத்தில் அகன்றது

சென்னை, ஜூலை 1—

"இன்று முதல் செங்கற்பட்டு மாவட்டத்தில், தாலுக்காக்களுக்கிடையே நெல், அரிசிப் போக்குவரத்துத் தடை நீக்கப்பட்டுவிட்டது; வட ஆற்காடு மாவட்டத்திலும் இத்தடையை இன்னும் ஒரு வார காலத்தில் நீக்குவது பற்றி ஆராயப்பட்டுவருகிறது"

என்று உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன், சட்டமன்றத்தில் அறிவித்தார்,

ஊராட்சி ஒன்றிப்புகள் ஒழிக்கப்படமாட்டா!

ஆட்குறைப்பு--வேலை நீக்கப் பிரச்சினைகள் இல்லை

எதிர்க் கட்சிப் பிரசாரத்துக்கு அண்ணு பதில்

சென்னை, ஜூன் 30—

"ஊராட்சி ஒன்றிப்புகள் இருக்கும்; அவைகளுக்கு எந்த ஆபத்தும் உண்டாக்குவதாக இல்லை; 'ஊராட்சி ஒன்றிப்புகள் சரியான முறையில் செயல்பட வேண்டும்' என்பதுதான் இந்த அரசின் நோக்கமே தவிர, ஊராட்சி ஒன்றிப்புகளை அடியோடு கலைத்துவிட வேண்டும் என்பதல்ல"

என்று, முதலமைச்சர் அண்ணு அவர்கள், சட்டமன்றத்தில் கூறினுர்.

தேர்தல் தொடர்பான மானியக் கோரிக்கை மீது நடந்த விவாதத்திற்கு முதலமைச்சர் பதிலளிக்கையில் குறிப்பிட்டதாவது:—

"அரசின் அலுவலர்கள், 'வேலை போய்விடுமோ' என்று கவலைப்படுவதாகத் தெரிவித்தார்கள். தாசில்தார்கள் போன்ற உயர் அலுவலர்கள் பதவியிலிருந்து இறக்கப்பட்டுவிட்டார்கள் என்று கூறுகிருர்கள்.

காங்கிரசாட்சியில் மாவட்ட ஆட்சியாளருக்கு (கலெக்டருக்கு) நான்கு உதவியாளர்கள் இருந்தனர். வருவாய்த் துறையைக் கலந்துபேசி, தேவை இல்லாததால் ஆட்குறைப்புச் செய்யப்பட்டு, அவர்கள் உரிய இடத்திற்கு அனுப்பப்பட்டார்கள்.

அதேபோன்று போலீசுத்துறையிலும் சில பதவிகள் குறைக்கப்பட்டு, அவர்கள் உரிய இடங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

ஒருவர் வேலைசெய்யக்கூடிய வேலைக்கு இருவர்—மூவர் என்று இருந்தால், அந்தப் பதவிகளைக் குறைக்க வேண்டும் என்பது இந்த அரசின் நோக்கமாகும்.

எந்த இடத்தில் ஆட்குறைப்புச் செய்யநேர்ந்தாலும், அவர்களுக்கு மறுவேலைக்கான வாய்ப்பு உண்டாக்கவும் தொடர்ந்து வேலை கொடுப்பதற்கும் அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்."

இரா. செழியன் பேச்சு

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியாவில் அமுலில் வைக்கப்பட்டுள்ளன.

"அரசியல் சட்டப்படி உள்ள அடிப்படை உரிமைகள் தொடர்ந்து நீக்கிவைக்கப்பட்டிருப்பதானது, இந்திய சனநாயகம் பற்றிப் பலமான கவலையை, சனநாயக நாடுகளில் உண்டாக்கியுள்ளது."

இந்திய சனநாயக ஆட்சியைப் பற்றி நினைக்கும் வெளிநாட்டினருக்கு இத்தகைய புகைபடிந்த—கறைபடிந்த காட்சிதான் கிடைக்க முடியும்.

"நாட்டின் சில பகுதிகளில் நிலவுகிற நிலைமைகளைச் சமாளிக்க நெருக்கடி நிலைமை அதிகாரம் இருந்தால் தான் இயலும்" என்று சிலர் வாதிடுகிருர்கள்.

உள்துறை அமைச்சர் அவர்கள் கூட, இந்த வாதத்தைப் பயன்படுத்தியுள்ளார்.

இப்பொழுதுள்ள சட்டப் பிரிவுகளை வைத்துக்கொண்டே நாட்டு நிலைமைகளைச் சமாளித்துவிடலாம். இந்தக் கருத்தை, நானல்ல—அரசாங்கம் ஒப்புக்கொண்டது.

இதுபற்றி 1966 ஆகஸ்டு 2-ந் தேதிய 'இந்துஸ்தான் டைம்ஸ்' பத்திரிகையில் வெளிவந்த செய்தியை இங்கு படிக்கிறேன்:—

"உள்துறைப் பிரிவினர் நடத்திய ஆராய்ச்சியில், 'இப்பொழுதுள்ள மாநிலச் சட்டங்களில் நிலைமைகளைச் சமாளிப்பதற்கான வசதிகளெல்லாம்—தெளிவாக இருக்கின்றன' என்ற முடிவுக்கு அவர்கள் வந்துள்ளார்கள்.

"இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தில் உள்ள அம்சங்கள் எல்லாம், மாநிலங்கள் பெற்றிருக்கும் சட்டங்களில் ஏற்கனவே இருக்கின்றன"

உள்துறை அமைச்சர் குல்சாரிலால் நந்தா மாநில முதலமைச்சர்கட்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டிருப்பதாவது:—

"இரண்டு மூன்று மாநிலங்களைத் தவிர மற்ற மாநிலங்களில், பொதுவாகவே அமைதிப் பாதுகாப்புச் சட்டங்கள் வெவ்வேறு பெயர்களில் இருக்கின்றன.

"இ. பி. கோ., கி. பு. கோ. ஆகிய சட்டங்களையும் சேர்த்துக்கொண்டால், இவைகளை வைத்துக்கொண்டு அமைதியையும், பாதுகாப்பையும் காப்பாற்ற முடியும் என்று நம்புகிறேன்; அடிப்படை உரிமைகளைக் குறைப்பதற்கோ, தள்ளிவைப்பதற்கோ தேவையில்லை"

இப்பொழுதுள்ள சட்டங்களைக் கொண்டு தேவையான பாதுகாப்பைப் பெறமுடியும் என்று அரசாங்கம் கருதுமேயானுல், நெருக்கடி நிலைமையை நீடிப்பதும், பாதுகாப்புச் சட்டத்திற்குப் பாதுகாப்புத் தருவதும் எதற்காக?"

வேட்டி-சேலை நெசவைக் கைத்தறிக்கே ஒதுக்கும் கோரிக்கை

தமிழக அரசு தொடர்ந்து வற்புறுத்தும்

சென்னை, ஜூலை 1—

"1952-ஆம் ஆண்டுமுதல் ஆண்டுதோறும் கைத்தறி வார விழாக் கொண்டாடப்பட்டு வருகிறது; 1962 முதல் 1966 வரை இதற்காக ரூ. 60,000 செலவிடப்பட்டுள்ளது. கைத்தறித் துணி வாங்குவதில் மக்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் கைத்தறி வாரத்தில் அதிகப்படியான விற்பனைக் கழிவு கொடுக்கப்படுகிறது. அனைத்திந்திய கைத்தறிக் கழகத்தின் ஆணைக்கிணங்கவே, அனைத்திந்திய அடிப்படையில் இவ்விழாக் கொண்டாடப்பட்டு வருகிறது"

என்று சட்டமன்றத்தில் தொழிலமைச்சர் இரா. நெடுஞ்செழியன் தெரிவித்தார்.

இது தொடர்பாக எழுந்ததுணைக் கேள்விகட்குப் பதிலளிக்கும் வகையில் அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:—

"இந்த விழாவில் எந்தக் கட்சித் தலைவரையும் அழைக்கக் கூடாது என்பதில்லை; எல்லாக் கட்சியினரையும், நாடாளுமன்ற—சட்டமன்ற உறுப்பினர்களையும், அழைத்து விழா நடத்துமாறு கலெக்டர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. அதன்படிதான் சென்ற ஆண்டுகூட விழா கொண்டாடப்பட்டது.

"அறுவடைக் காலமான பொங்கல் விழாவின்போது இந்தவிழாவையும் வைத்துக்கொள்ளலாம் என்றுநீண்டகாலமாக யோசனை கூறப்பட்டு வந்தது. ஆனுல், பொங்கல் பண்டிகை காலத்தில் மக்கள் எப்படியும் துணிமணிகளைவாங்கிவிடுவர். அப்படிவாங்காத காலத்தில்— வாங்கச் செய்வதன் மூலம் தேங்கியுள்ள கைத்தறித் துணியைக் கூடுதலாக விற்கமுடியும் என்பதாலும், மார்ச்—ஏப்ரல் மாதங்களில்தான் அதிகம் கைத்தறித் துணித் தேக்கம் ஏற்படுகிறது என்றும் கூறப்பட்டதால், பொங்கல் விழாவின்போது இவ்விழாவையும் வைத்துக்கொள்ளும் யோசனை கைவிடப்பட்டது.

"கரை போட்ட வேட்டி, சேலை நெசவுகளை கைத்தறிக்கே ஒதுக்கவேண்டும் என்று 1952 முதலே கோரப்பட்டு வருகிறது; இனியும் அந்தக் கோரிக்கை வலியுறுத்தப்படும். அதை நிறைவேற்ற என்னென்ன வழிகள் இருக்கின்றன என்பதை அறிந்து அதற்கு இந்த அரசு முயற்சி செய்யும்."

கே. விநாயகம்:—"ஆண்டுதோறும் இந்த விழாவைக் கொண்டாடியும் 'பிளீடிங் மதராஸ்' என்ற துணி தேங்கிக் கிடக்கிறதே; அந்த விழாவினுல் என்ன பலன் ஏற்பட்டிருக்கிறது?"

அண்ணு:—"கைத்தறி வார விழா, உள்நாட்டு விற்பனையை அதிகப்படுத்துவதற்காகச் செய்யப்படும் ஏற்பாடாகும். கனம் உறுப்பினர் விநாயகம் கூறும் 'பிளீடிங் மதராஸ்' துணி வெளிநாட்டு ஏற்றுமதிக்காக உற்பத்தி செய்யப்படுவதாகும்."

பஸ் கட்டணக் குறைவால் பயணிகள் அதிகரிப்பு!

மேலும் புதிய 'ரூட்'களில் பஸ் விடுவது பற்றிப் பரிசீலனை

அமைச்சர் மு. கருணுநிதி அறிவிப்பு

சென்னை, ஜூலை 1—

அரசுப் போக்குவரத்து விரைவு பஸ்களின் கட்டணம் குறைக்கப்பட்டபின் பயணிகள் தொகை அதிகரித்திருப்பதாகப் பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. மு. கருணுநிதி இன்று சட்டமன்றத்தில் அறிவித்தார்.

மேலும் பல துணைக் கேள்விகட்கு அமைச்சர் பதிலளிக்கையில் தெரிவித்ததாவது:—

"புதிய அரசு பொறுப்பேற்றபின், சென்னையிலிருந்து 7 புதிய வழிகளில் 14 பஸ்கள் விடப்பட்டுள்ளன. திருச்சிக்குசென்னையிலிருந்து மற்ருெரு புதிய வழியில் (பெண்ணுடம், பெரம்பலூர் வழியாக) விரைவு பஸ் விட ஆலோசிக்கப்பட்டுவருகிறது. இப்போது நஷ்டம் வரவில்லை. இரவு நேர விரைவு பஸ் விடும் உத்தேசமில்லை. மேலும் கூடுதலான விரைவு பஸ்கள் விடுவது பற்றிப் பரிசீலிக்கப்பட்டுவருகிறது. இரயில் வசதி இல்லாத பகுதிகளில் அரசுத் துறையிலும் பஸ்களை விட ஆவன செய்யும்; தனியார் துறையினர் பஸ் விட முன்வந்தால் அவர்கட்கும் ஊக்கம் அளிக்கப்படும்."

வெ. கண்ணன் நிகழ்ச்சிகள்

ஜூலை 4: சிவகிரி; 8, 9: சென்னை; 15: பழனி; 16: திருப்பூர்; 18: எஸ். புதூர்; 22: கோவை; 23: வல்லம்; 26: கிருஷ்ணுபுரம்; 30: பரமக்குடி; ஆகஸ்டு 6: குடந்தை.

நடக்க இருப்பவை

4--7--67

திருவொற்றியூர்

தி. மு. க. சார்பில் மாலை 6.30 மணிக்கு (10-வது வட்டம்) இரயில்வே காலனியில்; தலைவர்: மு. வரதராசன் எம்.சி.; பேசுவோர்: அமைச்சர் ஏ, கோவிந்தசாமி, என். வி. நடராசன் எம்.எல்.சி., அ. பொ. அரசு எம்.எல்.ஏ., சொர்ணம், மா.வெ. நாராயணசாமி, வை. பார்த்தசாரதி, எஸ். ஐ. வெங்கட்ராமன், எஸ். அன்பழகன்.

மதுரை 1-வது வட்டம்

தி.மு.க. சார்பில் மாலை 7 மணிக்கு செல்லூர் களத்துப் பொட்டலில்; பேசுவோர்: சி.பி. சிற்றரசு எம்.எல்.சி., கு. திருப்பதி பி.ஏ.,பி.எல்., ஏ.வி. இராசு.

எ. ரெட்டியபட்டி

தி.மு.க. சார்பில் பெ. சீனிவாசன் எம்.எல்.ஏ. அவர்கட்கு (கார் வழங்கும்) நிதி பரிசளிப்பு விழா; இரவு 7 மணிக்கு எம்.ஜி. ஆர். திடலில்; தலைவர்: கா.தி. சுப்பா ரெட்டியார்; பேசுவோர்: பெ. சீனிவாசன் எம்.ஏ., பி.எல்., எம்.எல்.ஏ., பி. இராமமூர்த்தி பி.ஏ.,எம்.பி., எஸ். இராமசாமி நாயுடு, எம். ஏ., பி எல்., எம்.எல்.ஏ., அழகுத் தேவர் எம்.எல்.ஏ., ஏ. ஆர். சுந்தரராசன் பி.ஏ., சுப்பா நாயக்கர், பெ. வரதராசன், ச. கிருஷ்ண சாமி, மற்றும் பலர்.

தமிழ்க் கவிஞர் பெருமன்றம்

திறனுய்வுப் போட்டி முடிவு

தமிழ்க் கவிஞர் பெருமன்றம் நடத்திய பாரதிதாசனின் 'உலகப் பன்பாட்டு' திறனுய்வுப் போட்டியின் முடிவை, சென்னை மாநிலக் கல்லூரியில் வெளியிட்டார்கள்.

திறனுய்வுப் போட்டியில் நடுவர் குழுவில் திரு. எஸ். நல்லபெருமாள், பேராசிரியர் மு. க. தங்கவேலர், பேராசிரியர் சி. பாலசுப்பிரமணியம், திருமதி சிவகாமி சிதம்பரனுர், திரு. தி. க. சிவசங்கரன் ஆகிய ஐவரும் இடம் பெற்றிருந்தார்கள்.

போட்டியில் கலந்துகொண்ட 23 பேர்களில் 'மயிலை பாரதம்' ஆசிரியர் திரு. மயிலைநாதன் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

மாவட்டத் தலைநகராக காஞ்சிபுரம்

புதிய மாவட்டம் உருவாகும்

சென்னை, ஜூலை 1—

காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்ட புதியமாவட்டம் ஒன்றை அமைப்பது குறித்து அரசு ஆராய்ந்துவருவதாக இன்று சட்டமன்றத்தில் வருவாய்த்துறை அமைச்சர் கே. ஏ. மதியழகன் அறிவித்தார்.

செங்கற்பட்டு மாவட்டத்தின் ஒரு பகுதியையும், வ. ஆ. மாவட்டத்தின் ஒரு பகுதியையும் இணைத்து இந்த மாவட்டத்தை உருவாக்குவது பற்றி தகவல்களைச் சேகரிக்குமாறு அரசு உத்தரவிட்டிருக்கிறது என்றும், விவரமான அறிக்கை ரெவினியூ போர்டிலிருந்து வந்ததும் அதுபற்றி முடிவு செய்யப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இராமநாதபுர மாவட்டத் தலைநகரை இராமநாதபுர மாவட்டத்துக்குள்ளேயே ஏற்படுத்துவது குறித்தும் கலெக்டர் விவரம் சேகரிப்பார் என்றும், அதன் பிறகு அது குறித்து ஆவன செய்யப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்பெற்றது.